சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.107/2021

23.07.2025

வா.சா.1 திரு. அசோகன், த/பெ.பக்கிரிசாமி

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எம்.காம், எம்.பி.ஏ, பிஎச்டி படித்துள்ளேன். நான் 1985 ல் வேலைக்கு சென்றேன். நான் முதலில் பால்வளத்துறையில் விரிவாக்க அலுவலராகவும் பின்னிட்டு புதுக்கோட்டை அரசு கலைக்கல்லூரியில் பேராசியராக இருந்தேன். எனக்கு எப்போது முதல் திருமணம் ஆனது என்றால் 1995 ல் வசந்தகுமாரி என்பவருடன் திருமணமானது. வசந்தகுமாரியிடமிருந்து விவாகரத்து பெற்றுவிட்டேன். எனது இரண்டாவது மனைவி பெயர் டாக்டர் ரேணுகாதேவி என்றால் சரிதான். நான் திருவாரூர் திரு.வி.க கல்லூரியில் பணியாற்றிய போது ரேணுகாதேவி அங்கு படித்தாரா என்றால் எனக்கு தெரியாது எனக்கும் ரேணுகாதேவிக்கும் 2009 ல் திருமணமானது. எனக்கும் ரேணுகாதேவிக்கும் நடைப்பெற்ற திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டதாகும். நான் திருவாரூர் திரு.வி.க கல்லூரியில் பணியாற்றிய போது ரேணுகாதேவியை காதலித்து திருமணம் செய்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரியாக இருந்த போது என் மீதும் என் மனைவி ரேணுகாதேவி மீதும் வருமானத்திற்கு அதிகமாக சொத்து இருப்பதாக குற்ற வழக்கு போடப்பட்டிருந்தது என்றால் அன்பழகன் வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்பின் அடிப்படையில் என் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த குற்ற வழக்கு நிலுவையில் தான் உள்ளது. என் மீது பதியப்பட்ட குற்ற வழக்கு முதல்தகவல் அறிக்கை நிலையில் உள்ளது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யவில்லை. குற்ற வழக்கில் தாவா சொத்துக்கள் என்னுடைய சொத்துக்களாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். குற்ற வழக்கில் அது விசாரணை அதிகாரியின் விசாரணையில் தாவா சொத்துக்கள் வரவில்லை என்பதால் சேர்க்கவில்லை. அந்த வழக்கு சம்பந்தமாக ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவையில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனார் பெயரில் சொத்துக்களை எதனடிப்படையில்

வாங்கினேன் என்றால் எனது தகப்பனார் பெயரில் இருந்த மரியாதை மற்றும் நம்பிக்கையின் பேரிலும் நான் வெளியூரில் இருப்பதாலும் வாங்கினேன். தாவா சொத்தின் முந்தைய உரிமையாளர்களிடம் நான் தான் கிரயம் பேசி கிரய தொகையும் பதிவு செய்ததும் நானா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு பதிவு செய்யப்படாத ஒப்பந்தங்கள் என் பெயரில உள்ளதா என்றால் உள்ளது. அந்தஆவணத்தை பார்த்தால் நான் தாவா சொத்தை எவ்வளவு ரூபாய்க்கு கிரயம் பேசினேன் எவ்வளவு முன்தொகை கொடுத்தேன் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். பத்திரம் பதிவு செய்த போது நான் நேரில் வரவில்லை. பதிவு செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நான் செய்து என் தகப்பனாரை பதிவு அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் பத்திரம் எழுதும் போது சொல்லிவிட்டு சென்றார். பத்திர பதிவு செலவு மட்டும் நான் அனுப்பினேனா என்றால் ஆமாம். தாவா சொத்து கிரய பத்திரத்தில் எனது தகப்பனாரிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது வழக்கமாக எழுதுவது. ஒவ்வொரு கிரய பத்திரத்திற்கும் எவ்வளவு செலவானது என்ற விவரம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. எனது தகப்பனாருக்கு எந்த எந்த சமயங்களில் தொகைகள் அனுப்பினேன் என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. எனது தகப்பனார் பெயரில் நான் பெயரளவில் சொத்துக்களை கிரயம் வாங்கினேனா என்றால் எனது தகப்பனார் எனக்கு டிரஸ்டி என்ற முறையில் அவர் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது. எனது தகப்பனார் நம்பிக்கையாக இருந்ததன்அடிப்படையில் டிரஸ்டி என்று சொல்கிறேன். கியரம் வாங்கும் போது சொத்துக்கள் எனது தகப்பனார் பெயரில் வாங்கப்படுகிறது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சொத்துக்களை எனது தகப்பனாரிடமிருந்து என்பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய முயற்சி செய்தேனா என்றால் 2013 ஆம் வருடத்திலிருந்தே முயற்சி செய்தேன். எனது தகப்பனார் மறுத்துவிட்டாரா என்றால்இல்லை, பேச்சுவார்த்தை நடந்தது. தாவா சொத்துக்களை பொறுத்து எனது தகப்பனார் 22.03.2013 ல் 1 ஆம் பிரதிவாதி அன்பழகன் பெயரில் இரண்டு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான் அதனடிப்பயைடில் சொத்துக்கள் அன்பழகன் பெயரில் வருவாய்துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் இடையூறு செய்வதாக சொல்லி

அன்பழகன் திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.126/2013 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் தாவா சொத்துக்களை நான் எனது தகப்பனார் பெயரில் கிரயம் வாங்கியதகா சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு 23.03.2022 ல் அன்பழகனுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் சரிதான். அதனை எதிர்த்து நான் இதே நீதிமன்றத்தில் மே.மு.எண்.04/2022 ல் மேல்முறையீடு செய்துள்ளேன். எனது தகப்பனார் கேட்டுக்கொண்டதன் பேரில் டிரஸ்டியாக நியமனம் செய்தேனா என்றால் இல்லை நானாக தான் டிரஸ்டியாக நியமனம் செய்தேன். தாவா சொத்துக்களை எனது தகப்பனார் பெயரில் நான் கிரயம் வாங்கயதாக சொல்லியுள்ளது சம்பந்தமாக எங்களுக்குள் ஏற்பட்ட பரிமாற்றங்கள் குறித்து ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் கடிதப்போக்குவரத்து இல்லை, போனில் தான் பேசிக்கொள்வோம். நேரில் வரும் போது சொத்து பற்றி பேசுவோம். நான் எவ்வளவு பணம் அனுப்பினேன் எவ்வளவு செலவானது என்ற கணக்கு விவரம் என்னிடம் கொடுத்துள்ளாரா என்றால் எழுத்துபூர்வமாக கொடுக்கவில்லை, வாய்மொழியாகதான் சொன்னார். என்னிடம் நான் தொகை செலுத்தியதற்கான குறிப்பு உள்ளதா என்றால் உள்ளது. விவசாய கடன் அரசாங்கத்தால் ஒரு பகுதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் எனது தகப்பனாரை டிரஸ்டியாக நியமனம் செய்ததற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. தந்தை பெயரில் ஆவணம் ஏற்படுத்துவது உலக வழக்கம் இல்லை என்பதால் ஏற்படுத்தவில்லை. நான் தாவாவில் செட்டில்மெண்ட் ஆவணத்தை பொறுத்து கோரும் பரிகாரம் இரண்டு பத்திரத்தை பொறுத்துதான் இரண்டு பத்திரங்களின் வா.சா.ஆ.10 ன் மதிப்பு ரூ.9,71,515/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ன் மதிப்பு ரூ.7,62,375/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10, 11 ஆவணங்களை தான் நான் செல்லத்தக்கது என கேட்கிறேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.10, 11 எற்பட்ட விவரம் அ.வ.எண்.126/2013 வழக்கு தாக்கல் செய்த போது எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த போது என் தகப்பனார் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். எனது தகப்பனார் 2021 ல் இறந்துவிட்டார். எனத தகப்பனார் உயிருடன் இருந்த வரையில் தாவா சொத்துக்கள் குறித்து எனது தகப்பனார் எழுதிவைத்த செட்டில்மெண்ட் செல்லத்தக்கதல்ல என நடவடிக்கை

எடுத்தேனா என்றால் எனது தகப்பனார் உயிருடன் இருந்தவரை பேச்சுவார்த்தை நடைப்பெற்றதால் எடுக்கவில்லை. எனது தகப்பனார் இறந்த பின்னிட்டு பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பில்லை என இந்த வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.அ.வ.எண்.126/2013 வழக்கில் என்னை குறுக்கு விசாரணை செய்த போது செட்டில்மெண்ட் பொறுத்து தனியாக ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று கேட்டதால் தாக்கல் செய்தேன். தாவா சொத்துக்கள் எனக்கு சொந்தமானது என்று விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். தாவா சொத்துக்கள் எனது அனுபவத்தில் உள்ளது என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அ.வ.எண்.126/2013 ல் தாக்கல் செய்த ஆவணங்களை பொறுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்களை எனது தகப்பனார் பெயரில் எனது டிரஸ்டி என்ற முறையில் வழக்கிற்காக தற்போது கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.தாவா சொத்துக்களை கியரம் பெற போதிய வருமானம் எனது தகப்பனாருக்கு இருந்தது என்றாலும் அதனடிப்படையில் தான் அவர் கிரயம் பெற்ற சொத்தை 1 ஆம் பிரதிவாதிக்கு கிரயம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனவே எனது தகப்பனார் 1 ஆம் பிரதிவாதி பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் முழு உரிமையாளர் என்பதால் தான் ஒரு பகுதியை 2 ஆம் பிரதிவாதிக்கு எழுதிவைத்துள்ளார் என்றாலும் அந்த ஆவணம் செல்லத்தக்கது என்றாலும் சரியல்ல. தாவாவில் நான் கோரும் பரிகாரம் காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணமும் கோரியுள்ள பரிகாரமும் தவறானது என்றால் சரியல்ல. எனது மதிப்பீட்டின்படி தாவா சொத்துக்கள் இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டு இருப்பதால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து உரிமை விளம்புகை பரிகாரம் கோராமல் கேட்டிருக்கும் மற்ற பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகள் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும் என் அனுபவத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை அ.வ.எண்.126/2013 ல் திருவாரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வழங்கியது என்றால் சரிதான். அந்த அ.வ.எண். 126/2013

ன் தீர்ப்பு நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். தீர்ப்பாணையின் நகல் பி.வா.சா.ஆ.2 ஆகும். தாவா சொத்திற்குண்டான அசல் ஆவணங்களில் 4 ஆவணங்கள் வங்கியிலும் மற்ற ஆவணங்கள் அ.வ.எண்.126/2013 வழக்கிலும் உள்ளது. எனது தம்பி வங்கியில் பெற்ற கடனுக்கு பொறுப்புறுதியாக நான்கு ஆவணங்களை எனது தகப்பனார் கொடுத்துள்ளார். ஆவணங்களை வங்கியில் கொடுப்பதற்கு முன்பு நான் தான் வைத்திருந்தேன். நான் அனைத்து மூல ஆவணங்களையும் சட்டத்திற்கு புறம்பாக வீட்டிலிருந்து எடுத்து கையகப்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தவறானது என்றாலும் தாவா படி எனக்கு தீர்ப்பு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.